★ சிங்களவர் - முஸ்லிம்களுக்கு ஆயுதம் வழங்க சிபார்சு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சிங்கள-முஸ்லிம் கிராம வாசிகளுக்கு ஆயுதங்கள் வழங்க சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒவ்வொரு கிராமங்களிலுமிருந்து குறிப்பிட்ட அளவு கிராம வாசிகள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

சிங்கள - முஸ்லிம் கிராம வாசிகளுக்கு பயிற்சியளித்து ஆயுதம வழங்க அரசு மேற்கொண்டுள்ள முடிவு தமிழ் மக்களிடையே பெரும் அச்சத்தை

(4ம் பக்கம் பார்க்க)

05-1992

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 2 இதழ் 94
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15 — 05 — 1992

## 10,000 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

(கொழும்பு)

அரசாங்கத் துறையில் 1000 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

மேலும் 6000 பட்டதாரிகள் தனியார் துறையில் வேலை வாய்ப்பு அனுபவத்தை பெறவுள்ளனர்.

ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கபடவுள்ளதுடன் 1000 பட்டதாரிகளுக்கு மொழி பெயர்ப்பாளர் நியமனம் வழங்கப்படும். மேலும் 2,420 பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

★ சட்ட விரோத இயக்கமாக அறிவித்து

# தமிழீழ விடுதலைப் புலிகளை இந்திய அரசு தடைசெய்தது!

## தடை உத்தரவு உடனடியாக அமுல்

(புதுடில்லி)

**இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டவிரோத இயக்கம் என பிரகடனப்படுத்தியுள்ள இந்திய மத்திய அரசு புலிகள் இயக்கத்திற்கு தடைவிதித்துள்ளது**

**இந்த அறிவிப்பு உடனடியாக அமுலுக்கு வருகிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது**

இந்தபிரகடனத்தைமாநிலங்களின் அவையல் நேற்று உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் தெரிவித்தார்.

அமைச்சர் எஸ். பி. சவான் மாநிலங்களின் அவையில் மேலும் தெரிவிக்கையில்கூறியதாவது:

விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ்நாட்டிலுள்ள இளைஞர்கள் சிலரைசேர்த்துக்கொண்டு தமிழர் தேசிய மீட்புப் படை என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய அரசுக்கு தகவல்கள் கிடைத்துள்ளது. மேற்படி இளைஞர்களுக்கு விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தில் ஆயுதங்களையும்கொடுத்து பயிற்சியளித்தது. இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டை பிரிப்பதற்கான பணியில் ஈடுபட இந்த இளைஞர்களை விடுதலைப் புலிகள் இந்தியாவுக்குஅனுப்பி

(4- பக்கம்

## பத்து லட்சம்பேர் இலங்கையில் இடம்பெயர்வு

[கொழும்பு]

இலங்கையில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கையினுல் பத்து லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான புனர் வாழ்வு, மற்றும் நிவாரணப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு இலங்கை அரசிடம் போதியநிதி இல்லைஎன்று தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல், வீடுகள் அமைத்துக் கொடுத்தல் உட்

[4ம் பக்கம் பார்க்க]

## தமிழக பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரம்

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்திய அரசு தடைவிதித்துள்ளதையடுத்து தமிழகப் பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரங்கள் கிடைக்கவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

இதன் மூலம் தமிழகத்தில் பொலிசாரின் தர்ப்பார் அதிகரிக்கலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள்மீதான தடை, தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமதுஅரசியல் எதிர்ப்பாளர்களை பழிவாங்க ஓர் சந்தர்ப்பத்தை உருவாக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்களக் கட்சிகளின் யோசனை தெரிவுக்குழுக்கு தேவையில்லை

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கான தீர்வு குறித்து சிங்களக் கட்சிகள் தெரிவுக்குழுவின்முன் தமது யோசனைகளை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லையென தெரிவுக்குழு கூறியுள்ளது.

இது தமிழ் மக்களின் பிரச்னை. தமிழ்க் கட்சிகளின் யோசனைகளிலேயே சிங்களக் கட்சிகளின் முடிவு தங்கியுள்ளதெனவும் தெரிவுக்குழு தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா, மன்னார் தாக்குதலில் ஐந்து ராணுவத்தினர் பலி

(கொழும்பு)

வவுனியா. மன்னார் பகுதிகளில் விடுதலைப்புலிகள் நடத்திய இரு தாக்குதல்களில் ஐந்து படையினர் கொல்லப்பட்டார்கள் பலர் படுகாயமடைந்தனர். பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

செட்டிகுளம் பகுதியில் நேற்றுக்காலை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலிலே மூன்று படையினர் கொல்லப்பட்டனர்.

மன்னார் தந்திரி மலைப்பகுதியில் காவலரண் ஒன்றினை நோக்கி வந்த எட்டு இராணு

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று வங்கிகள் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வங்கிகளும் இன்று வழமைபோல் இயங்கும் என்று வங்கிகள் முகாமையாளர்கள் அறிவித்துள்ளார்கள். (வி)

## பாதுகாப்பு செலவினங்கள் நாட்டில் திடீர் அதிகரிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் பாதுகாப்பு நிலைமை மோசமாகி வருவதால் நாட்டின் பாதுகாப்புச் செலவினம் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து கடந்த 1-ந் திகதி முதல் பாதுகாப்பு வரி ஒரு சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது பாதுகாப்பு செலவினங்களும் அதிகளுக்கான

[4ம் பக்கம் பார்க்க]

## இலங்கை அரசுக்கு பெரும் நெருக்கடி

(கொழும்பு)

இலங்கை அரசு பாதுகாப்புச் செலவினங்களை அதிகரித்துள்ளதையடுத்துப் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## தி.மு.க. மீது வழக்கு வாழப்பாடி கோரிக்கை

(சென்னை)

தி. மு. க. மீது வழக்குத் தொடருமாறு இந்தியப் பிரதமரை திரு. வாழப்பாடி இராமமூர்த்தி கேட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் 1971-1975 ம் ஆண்டு காலங்களில் தி. மு. க ஆட்சியின்போது நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுகளை விசாரித்த சர்க்காரியா குழு அளித்த அறிக்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதல் அதிகரிப்பு இராணுவ வட்டாரங்கள் கவலை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் மடங்கு அதிகரித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறுகையில்:-

கடந்த சில வாரங்களில் வடக்கு-கிழக்கில் பல திடீர் தாக்குதல்களைப் புலிகள் நடாத்தியுள்ளனர். இது படையினருக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பாக வடபகுதியில் இத்தாக்குதல்களைப் புலிகள் தீவிரப்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார்

[4-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## கணிதம் O/L

92, 93 விசேட கவனிப்பு ஆரம்பத்தில் இருந்து உயர்ந்த பெறு பேறுகள் அடையக் கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc (Cey) 83, சிவன்கோவிலடி திருநெல்வேலி. (சி-6301)

## சங்கீதம் வினாவிடை

தயாரிப்பு ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா ஆண்டுகள் 6, 7, 8, 9 மற்றும் வட இலங்கைச் சங்கீத சபையின் தரம் 2 பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியது. வெளியிட்டோர்: நடுவுத்துருத்தி, நல்லூர்ச்சந்தை, கிடைக்குமிடம்: ஸ்ரீ காந்தா புத்தகசாலை 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6285)

## சேவை

தென்மராட்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி. உங்களுக்குத் தேவையான றபர் முத்திரைகளை (Rubber Stamp) விரும்பிய டிசைன்களில் செய்து கொள்ள இன்றே நாடுங்கள். சோதி அச்சகம், முதலாம் மாடி 25, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. (ஏ-2135)

## புத்தகங்கள் விற்பனைக்கு

தரமான புத்தகங்களும், துளிர், சலனம், சுபமங்களா, வெளி, முன்றில் போன்ற சஞ்சிகைகளும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். ஈழத்து எழுத்தாளர்களின் வெளியீடுகளும் விற்பனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். (சி-6291)

## ஆங்கில இலக்கியம்

யாழ். பல்கலைக்கழக G A Q. இலக்கிய நூல்கள்; Animal Farm, Withering Heights, Heart of Darkness சில பிரதிகளே விற்பனைக்கு உண்டு. வேறும் பல இலக்கிய நூல்களும் உண்டு. பூபாலசிங்கம் புத்தகநிலையம், யாழ்ப்பாணம். (எ-2138)

## A/L இரசாயனம்

A/L 92 வினாவிடை வகுப்பு ஆரம்பம்: 16-05-92 சனி 9-00 a. m. A/L 94 ஆரம்பம்: 16-5-92 12-00 Noon. ஆசிரியர் சத்தீஸ் 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-6308)

## பாலாஜி புத்தகசாலை

லஷ்மி, ரமணிச்சந்திரன், சுஜாதா துப்பறியும் நாவல்கள், புத்தம் புதிய பிறந்தநாள் வாழ்த்து மடல்கள் விற்பனைக்குண்டு. 15% கழிவு வழங்கப்படும். 27, மின்சார நிலைய வீதி, 15/5, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (எ-2142)

## மீரா பிரசுரங்கள்

கற்பனையின் இனிய கனவுகளன்று காலத்தை பிரதிபலிக்கும் கதைகள், சமுதாயப் பிடிப்புள்ள கதைகள் யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி, வல்வெட்டித்துறை, கிளிநொச்சி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (சி-6287)

## G. C. E. A/L விலங்கியல்

அனுபவம் வாய்ந்த ஆசிரியரால மீட்டல் வினாவிடை (Paper Class) 1992 ஆரம்பம் 16-5-92 சனி காலை 9 மணி; 1993, 94 ஆண்டு தனிப்பட்ட வகுப்புகள். எஸ். செல்வநாயகம் B. Sc. (Cey) Dip. Ed. இணுவில் தெற்கு. (சி-6300)

## வைத்திய சேவை

வியர்வைப் பருக்கள், முகப் பருக்கள், சதை வளர்ச்சி, தலைமயிர் வளர, கழலைக்கட்டி, தலைமயிர் நரை மாறுவதற்கு, வாதம், நரம்புத் தளர்ச்சி தேமல், வெண்குஷ்டம், மாதவிலக்குக் கோளாறுகள், செய்வினை, சூனியம், பிணிதோஷம் போன்ற வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம். வேளாங்கண்ணி வைத்தியர் எம். கருணாதரன், வேளாங்கண்ணி வைத்தியசாலை, 616, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி6293)

# தையல் மனையியல் கைப்பணிப் பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட மாதர் அபிவிருத்தி நிலையங்கள் நடாத்தும் தையல், மனையியல், கைப்பணிப் பொருட்காட்சி இன்று 15ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நாவலர் மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் மேற்படி பொருட்காட்சிக்கு யாழ் அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தம்பதிகள் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வர். (வ)

# விவசாய ஓய்வூதியத்திட்டம்

(கொழும்பு)

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்தவர்கள் நேற்று முதல் தங்கள் ஓய்வூதியத்தை தபாற் கந்தோர்களில் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இத்திட்டத்தில் சேர்ந்து கொண்ட 24 வயது விவசாயி ஒருவர் திடீரென காலமானதை அடுத்து விவசாய காப்புறுதி திட்டத்தின் கீழ் அவருக்குரிய 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு நேற்று அவரது தந்தையிடம் கையளிக்கப்பட்டது. (கே)

# இராசி பலன்

15 - 05 - 1992

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 02)

சதுர்த்தசி மு. இ. 10-39 வரை; சுவாதி முன் இரவு 11-44 வரை இராகு காலம் காலை 10-23 முதல் 11-53 வரை சுப நேரம் காலை 5-53 முதல் 7-23 வரை சித்தயோகம்.

மேடம்: எதிர்பாராத தன லாபம், சுற்றுப்பயணம், காரிய சித்தி.

இடபம்: ஞானசித்தி, குடும்ப சுகம் திடீர் விருந்தினர்.

மிதுனம்: தனநஷ்டம் பெரியவர் கோபம் யோசனை.

கடகம்; கருத்துமுரண்பாடு. குடும்ப அலைச்சல், அதிருப்தி.

சிங்கம்: நண்பர் உதவி, மகான் தரிசனம், தொழில் லாபம்.

கன்னி: வீண் வார்த்தை, அபவாதம், வைத்தியசெலவு.

துலாம்: மக்கள் பெருமை, விருந்துஉபசாரம் புதியமுதலீடு.

விருச்சிகம்: பணக்கஷ்டம், உடல் உபாதை, அகால போஜனம்.

தனுசு: சுயமுயற்சி, காரிய சித்தி, தெய்வ தரிசனம்.

மகரம்: மனமகிழ்ச்சி, பயண முயற்சி, குடும்பநன்மை.

கும்பம்: ஏமாற்றம், எதிரிகள் தொல்லை, விரக்தி.

மீனம்: வாதப்பிடிப்பு, மனச் சஞ்சலம் பிதாவழித்துயர்.

— ஜோஸ்யர்

# கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைதொழில் வர்த்தக சங்கத்தின் வருடாந்தக் கலந்துரையாடல் அண்மையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் வர்த்தகர்களும் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத் தலைவர் திரு. தேவராஜசிங்கம் தலைமையில் இக்கலந்துரையாடல நடைபெற்றது. (155)

# உணவு முத்திரை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள சகல கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் 7வது தொடர் உணவு முத்திரை உடன் விநியோகம் செய்யப்படுகிறது என்பதை கிராமசேவை அலுவலர்கள் அறிவித்துள்ளனர். பொது மக்கள் உடன் கிராமசேவை அலுவலர்களிடம் தொடர்பு கொளளவும்.

# இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவிலில் நடைபெற்று வரும் இலட்சார்ச்சனை நிகழ்ச்சியில் இன்று மாலை 6 மணிக்கு திரு. ஆறு திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

0 0 0

(மானிப்பாய்)

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் தேர் உற்சவம் இன்று 15ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். (71)

0 0 0

(உடுவில்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சித்திர. ஓவிய வகுப்புக்களில் சேரவிரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ள இவ் வகுப்புக்கள் நா 16ம திகதி முதல் சனி ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

சேரவிரும்புவோர் விண்ணப்பங்களை திரு. பொ. பாலகுமார், சன்மார்க்கசபை, குரும்பசிட்டி என்னும் விலாசத்திற்கு இன்று 15ம் திகதிக்கு முன் சேர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டியின் 2ம் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம்:

குருநகர் பாடும் மீன் எதிர் சிவானந்தா. இப்போட்டி நெல்லியடி ம. ம. வி. மைதானத்தில் நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழகத்தின் முதலாம் வருடநிறைவையொட்டி நடாத்தப்படும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்:

பொற்பதி ஐ. வி. கழகம் எதிர் இளங்கதிர், யங்றேயல் எதிர் அல்வாய் நண்பர்கள். இப்போட்டி யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

# க. பொ த. [சா] விசேட சித்தி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து விசேட க. பொ. த. (சா. தா.) தரப் பரீட்சைக்குத் தோற்றியோரின் 6 மாணவர்கள் ஏழு பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர். இவர்கள் ஆறு பேரும் 8-வது பாடமான சித்திரத்திலேயே விசேட சித்தியைப் பெறத் தவறியுள்ளனர். 11 மாணவர்கள் ஆறு பாடங்களில் விசேட சித்திகளையும் 10 மாணவர்கள் ஐந்து பாடங்களிளில் விசேட சித்திகளையும் பெற்றுள்ளனர். (52)

# வியாபாரம்பெருக விளம்பரம் செய்க


## இரசாயன நூல்

A/L (உயர்தரம்)

அடிப்படை இரசாயனம் பகுதி - I

ஆக்கியோன்: த. சத்தீஸ்வரன்

வெளிவந்துவிட்டது.

கிடைக்குமிடம்:

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(எ-2141)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளை, தலைமையகம்.

## விரிவுரையாளர் பயிற்சி நெறி

1. முதலுதவி.
2. ஆரம்ப சுகாதார கவனிப்பு.
3. இளைஞர் சேவை.
4. அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்தல்.

மேற்படி இலவச பயிற்சிநெறி ஒவ்வொன்றிற்கும் யாழ். குடாநாட்டின் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சங்க உறுப்பினர்கள், தொண்டர்கள் ஆகியோரில் பிரிவிற்கு இருவரும் ஒவ்வொரு அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து ஒருவரும் தெரிவு செய்யப்படுவர்.


இப் பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர் வரும் 21-05-92ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். 23-05-92 காலை 10-00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

ச. சிவானந்தராசா.
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி.
யாழ்ப்பாணம்.
13-05-92.

(எ-2144)


# 31-ம் நாள் நினைவஞ்சலி



## சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம்

[சேமன் கோபால்]

[முன்னைநாள் சாவகச்சேரி நகரபிதா]

**விண்ணில்:** 10-07-1926 **மண்ணில்:** 15-04-1992

இடுக்கண் வந்தபோது இமைபோல நின்றாய்
இறுமாப்பெய்திேனம்!
இறைவன் இமைப்பொழுதில் அரவணைத்தான்
குடும்பத்தாருடன் துன்பத்தில் பங்குகொண்டு

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
விக்னேஸ்வரா களஞ்சியம்

மார்க்கட் உட்புறம்,
சாவகச்சேரி.

க. பரமநாதன்.
4/3, முருகமூர்த்தி வீதி,
யாழ்ப்பாணம்,

(சி 6313)

# அளவெட்டி
# கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
# தேர்த்திருவிழா சிறப்பு மலர் (15-5-1992)

## தல வரலாறு


மாருதப் புரவீக வல்லியாம் சோழ அரசிளங்குமாரி தனது குதிரைமுகம் நீங்கப்பெறுது கீரிமலையில் தீர்த்தமாடி மாவிட்டபுரத்தில் முருகப் பெருமானை பிரதிஷ்டை செய்து குதிரைமுகம் நீங்கப் பெற்றும், தனது நினைவிற்கும் பார்வைக்கும் அக் குதிரை முகம் நீங்கப்பெறுமையால் முதற்கண் விநாயகப் பெருமானை பிரதிஷ்டை செய்யாததன் காரணம் இதுவெனப் பெரியோர் கூற, அக் குறையினை தீர்ப்பன வேண்டி ஏழு விநாயகர் ஆலயங்களை பிரதிஷ்டை செய்தாள். அவை யாவன கொல்லங் கலட்டி, வறுத்தலை, அளகொல்லை, கும்பழாவளை, பெருமாக் கடவை, ஆலங்குழாய், கல்வளை என்பன. இவ் 7 தலங்களிலும் மத்தியஸ்தமாக விளங்கும் கும்பழாவளை பிள்ளையாரை பிரதிஷ்டை செய்யும்போது அவளது குதிரைமுகம் பார்வைக்கும் நினைவுக்கும் முற்றுக நீங்கிய தன்மையில் இவ் இடத்திற்கு மாவிழிதிட்டி என பெயர் வந்தது என்றும் இந்த தலத்துக்கு தென்கிழக்கு மூலையில் வயலும் குளமும் இருந்ததாயும் குளத்திற்கு குமாரத்தி குளம் என்ற பெயர் எனவும் இவை தற்காலத்தில் குடியிருப்புக்களாக மாறிவிட்டன என வரலாறு கூறுகின்றது.

## தர்மகர்த்தா சபை

கும்பழாவளை அளவெட்டி வளைப் பதிகத்தில் அடியார் பாடிய பழைய பாடல் இது

''சித்தங் குலைந்த வடியான்
மனத்துயர் தீரவெண்ணி
அத்தெங்கொரு குலையோரிரு
பாதியருண நிறம்
வைத்தங் கெவர்க்கும்
முன்னற்புதம் காட்டி
மகிழ வைத்தாய்
நந்தத் தருவினையேற்கு
கலிகோ அருள் நல்குவதே''

இவ்வாலயத்து வளர்ச்சிக்கு தர்மகர்த்தா சபைத் தலைவராக பல காலமிருந்து தற்போது காலஞ்சென்ற திரு. செ. மயில்வாகனம் அவர்களின் சேவை பாராட்டப் படவேண்டியது. இவ்வாலயம் வருடந்தோறும் வளர்ச்சியடைந்துவருவது மாத்திரமன்றி ஆலயத்தில் வழிபடுவோர் தொகையும் அதிகரித்து வருகின்றது. இவ்வாலயத்துக் கருகாமையில் ஓர் கலியாண மண்டபம் கட்டுவதற்கு ஓர் அன்பர் முன்வந்துவ்ளார். இங்கு நடைபெறும். நடைபெற்ற திருப்பணிகள் யாவும் விநாயக அடியார்கள் மனமுவந்து அளித்த பேராதரவினுலேயே என்பதைக் கூறும் போது மகிழ்ச்சியடைகின்றோம். எல்லாம் வல்ல விநாயகப்பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.



## தொண்டர் சபை வரலாறு

1956ம் ஆண்டு இவ் ஆலயத்தில ஆரமபிக்கப்பட்ட தொண்டர் சபையானது 300 அங்கத்தவர்களைக் கொண்ட சிறப்பான சபையாக விளங்குகின்றது. மகோற்சவகாலங்களிலும், ஏனைய உற்சவகாலங்களிலும் ஆலயத்தில் தொண்டாற்றி வருவதோடு, ஐப்பசி வெள்ளி, சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை, விநாயக சதுர்த்தி, தேர்த் திருவிழா ஆகிய உற்சவ காலங்களில் பண்ணிசை நிகழ்ச்சிகள் சமய பிரசங்கங்கள் சங்கீத நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றது.

1990-ம் ஆண்டு தொடக்கம் பண்ணிசை வகுப்பையும் 1992-ம் ஆண்டு தொடக்கம் மிருதங்க வகுப்பையும் ஒழுங்காக நடாத்தி வருட முடிவில் பரீட்சை நடாத்தி பரிசில்களும் வழங்கி வருகின்றது;

### இவ்வாலயத்தின் சிறப்புக்கள்

விநாயகப் பெருமானுடைய முப்பத்திரண்டு அற்புதத் தோற்றங்களும் பெரிய அளவில் சித்திரமாக வரையப்பட்டு ஆலயத்தின் உட்பிரகாரத்தில் காட்சி அளிக்கின்றன. ஆலயத்தின் தெற்குவீதியில் 62 அடி சதுரமான தீர்த்தக் கேணி ஒன்றும் அக்கேணி நடுவே நீராடி மண்டபம் அம் சங்களோடு தாமரை மலர் இதழ்களின் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மண்டபத்தில் விநாயகப் பெருமானின் பதினறு தோற்றங்கள் சிலையாகச் செதுக்கப்பட்டுள்ளது. சுவாமி தீர்த்தமாடும் போது நவநங்கைகள் விநாயகப் பெருமானுக்கு தீர்த்தம் சொரியும் பாவனை பார்ப்பவர் மனதை பரவசப்படுத்தும் மண்டபத்தின் நடுவே தீர்த்தக் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு இருப்பதும் குறிப்பிடத்தககது தீர்த்தக் கேணியின் மேற்குப் புறத்தில் சுவாமிஅமர்வதற்காக அழகிய மண்டபம் ஒன்றும் தெற்குப் புறத்தில் முருகன் கோவிலும் அமைந்துள்ளது. கோபுர வடிவான ஸ்ரீசக்கரமும் புவனேஸ்வரி அம்பாளும் அமைந்திருப்பதோடு மாதம் தோறும் பூரணை அன்று ஸ்ரீ சக்கர பூசை சந்திராந்தி தீர்த்தம் நடைபெறுகின்றன. மூன்று தேர்களும் ஒரே வரிசையில் நிற்கக் கூடிய தேர்முட்டியும் தேர்கள் விடக்கூடிய பிரமாண்டமான தேர்க்கொட்டகையும் அமைந்திருக்கின்றது. தேர் உற்சவத்தின்போது தொண்டர் சபையின் பண்ணிசை நிகழ்ச்சியும் அன்னதானமும் வருடந்தோறும் சிறப்பாக நடாத்தி வருகிறார்கள்.

## பூங்காவனத் திருவிழா

வழக்காடுமன்றம்

**'குற்றக்கூண்டில் கைகேயி'**

| வாதிகள் | பிரதிவாதிகள் |
|---|---|
| திரு. க. செல்வவடிவேல் | புலவர் ஈழத்து சிவானந்தன் |
| திரு. ஆ. திருமுருகன் | திரு. த. குமாரதாசன் |
| திரு. தி. திருநந்தகுமார் | திரு. த. சிவகுமாரன் |

நீதிபதி: திரு. இ. ஜெயராஜ்
(கம்பன் கழக அமைப்பாளர்)

ஆலய
தர்மகர்த்தாக்கள்
சபை.

ஆலய
தொண்டர் சபை.
அளவெட்டி.

## தேர்த் திருவிழா நிகழ்ச்சிகள்

இன்றுகாலை 6-30மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மும்மூர்த்திகளும் காலை 9-00 மணிக்கு தேருக்கு எழுந்தருளுவார்கள்.

## இரதோற்சவ பண்ணிசை நிகழ்ச்சி

1. அருட்கவி சி. விநாசித்தம்பி ஆசிரியரின் ஆசியுரை
2. சைவப்புலவர் எஸ். செல்லத்துரை அவர்களின் சொற்பொழிவு
3. திரு. வி. சிவஞானசேகரம்
4. திரு. சி. சிவஞானராஜா
5. திரு. சி. பாலச்சந்திரன்
6. செல்வி நாகம்மா கதிர்காமர்
7. செல்வி விஜயலட்சுமி இராமலிங்கஐயர்

இடைவேளை

மிருதங்க வகுப்பு மாணவர்கள்

| A வகுப்பு | B வகுப்பு |
|---|---|
| செல்வன் லோ. ஸ்ரீராகவன் | செல்வன் வி. பிரசன்ன |
| செல்வன் பா. முகுந்தன் | செல்வன் ச. அருணன் |

பண்ணிசை வகுப்பு மாணவர்கள்

A பிரிவு
B பிரிவு
அதியுயர் A பிரிவு

8. திரு. ந. இராமர் லட்சுமணர்
9. திரு. V. K. நடராசா

பக்கவாத்தியம்

வயலின்: R. S. கேசவமூர்த்தி அவர்கள்
மிருதங்கம்: P. சின்னராசா அவர்கள்


தேரேறி ஒய்யாரமாகப்
பவனி வரும்
கும்பழாவளை ஓங்கார
விநாயகன்
காட்சி காண வாரீர்!

★

அளவெட்டி மல்லாகம்
**பல நோ. கூ. சங்கம்**

★

விநாயகர் களஞ்சியம்
அ. பூபாலசிங்கம்
எஸ். பி. அன் ரேடேர்ஸ்
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி

★

பொன்மலர் களஞ்சியம்
வ. அப்புத்துரை
களஞ்சியம்
ராஜா ரவி சலூன்
பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி.

★

க. கதிர்காமசிங்கம் சன்
வி. அமரநாதன்
செ கிருஷ்ணராஜா
சங்கானை வலலை வீதி,
அளவெட்டி

★

துர்க்கா பேக்கிங் சென்ரர்
ஓர் அன்பர்
அளவெட்டி

★

செ. சிவராசா
மரக்கறி வியாபாரி
ராஜன்
மரக்கறி வியாபாரி
அருள்
மரக்கறி வியாபாரி
என். சிறீஸ்கந்தராசா
மரக்கறி வியாபாரி
சுன்ஞகம்

★

ஈஸ்வரி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
அஸ்வினி யுவலரி
பியூட்டி சென்ரர்
நியூ சன்யோ
சுன்ஞகம்

★

பா. ஜெயக்குமார்
ஓர் அன்பர்
ஐ. சச்சிதானந்தம்
பொ. மகாலிங்கம்
(லிங்கம் கபே)
சுன்ஞகம்


## ஓங்கார விநாயகனின் ஒய்யாரப் பவனி

ராகம்: ஹம்ஸாநந்தி — தாளம்: ஆதி

**பல்லவி**

ஊர்கூடித் தேரிழுக்க
ஓங்கார விநாயகன்
ஒய்யாரமாகப்
பவனி வந்தான் – அளவையில்

**அநுபல்லவி**

தேர்மீது பவனிவர
தெய்வகானம் இசைக்க
பார்மீது பக்தர்கள்
பரவசக் கண்ணீர் சொரிய

**சரணம்**

நாதஸ்வர ஒலி
விநாயகன் புகழ்பாட
ஆதரவாய்த் தவில்
ஆனந்தமாய் முழங்க
வேதகோஷம் ஒலிக்க
கொம்பினெழுத்தாணி யேந்தி
கும்பழாவளைக் கொம்பன்
அம்புவியில் பாரதத்தை
அழகொழுகத் தந்தவனும்
நம்பும் அடியருக்கு வந்தே
நவில் முப்பத்திரண்டுருவில்
கிம்புரி ஆனைமுகன்
கும்பிட்டடியார் பக்தியுடன்

— 'கவிமாமணி'

# தமிழகத்திலிருந்து திரும்பியவர்களிடம் 116 சைக்கிள்கள் வவுனியாவில் இராணுவத்தால் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பியவர்களிடமிருந்து 116 சைக்கிள்கள் இராணுவத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. வன்னிப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த 120 குடும்பங்கள் ஒரு மாதத்திற்கு முன் மீண்டும் தாயகம் திரும்பி வவுனியாவிலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்தனர்.

இவர்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்புவதற்கு இராணுவ அனுமதியுடன் தமமிடமிருந்த சைக்கிள்களையும் எடுத்துக்கொண்டு வீடுகளுக்குத் திரும்பும்போது வவுனியா தடை முகாமில் வைத்து இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதனால் சைக்கிள்களை இராணுவத்திடம் கொடுத்து அவர்கள் வீடு திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது. (வி)

# முத்தமிழ் விழா நிதிக்கான கலை நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் டல பாகங்களிலும் அடுத்த மாதம் இடம்பெறவிருக்கும் முத்தமிழ் விழாவிற்கு நிதி சேகரிப்பதன் பொருட்டு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும் கலை நிகழ்ச்சிகள் இன்று 15-ந் திகதியும் நாளை 16-ந் திகதி நாளை மறுதினம் 17-ந் திகதி ஆகிய மூன்று தினங்கள் வடமராட்சிப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

இக்கலை நிகழ்ச்சிகளில் சாந்தன் குழுவினரின் 'போர்க்கால ராகங்கள்' இன்னிசை நிகழ்ச்சியும், 'சந்தனக் காடு' நாடகமும் இடம்பெறவுள்ளன.

இக்கலை நிகழ்ச்சி இன்று வல்வை முத்துமாரி அம்பாள் ஆலய வீதியிலும், நாளை சனிக்கிழமை நெல்லியடி ம. ம வீதியிலும், 17-ந் திகதி பருத்தித்துறை பழைய பேருந்து நிலைய மைதானத்திலும் இடம்பெறவிருக்கின்றன.

## அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக ஆவண நிலையம் இன்று செயலகத்தின் மேல்மாடியில் முற்பகல் 10-30 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இவ் ஆவண நிலையம் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதனின் மேற்பார்வையில் இயங்கவுள்ளது.

## திங்கள் தபால் விநியோகம்

(அரியாலை)

கொழும்பிலிருந்து குமாரி கப்பலில் கொண்டுவரப்பட்ட 271 தபால்பொதிகள் 18ம் திகதி திங்கட்கிழமை விநியோகம் செய்யப்படவிருப்பதாக தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி-59)

## இலங்கை அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையிலிருந்து இது தெரியவந்துள்ளது. பாதுகாப்பு வரியை 3 சதவீதமாக அதிகரித்திருப்பதன் மூலம் 55 மில்லியன் டாலர் அரசு பெறவுள்ளது.

விற்பனைப் பொருட்கள் மீதும் பெரும் வரி அதிகரிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. அரசின் இந்த நடவடிக்கை பெருய்எதிர்ப்பை சம்பாதிக்க நேருமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## புலிகளின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தற்போது வடக்கில் சில பகுதிகளில் படை நடவடிக்கை இடம்பெறுவதாகவும் கூறினார். (சி-மா)

## தி. மு. க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையின் அடிப்படையில் தி. மு. க. மீது வழக்குத் தொடருமாறு பிரதமரை திரு. வாழப்பாடி இராமமூர்த்தி கேட்டுள்ளார். (மா)

## 10,000 பட்டதாரிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாரிகளுக்கு வேலைவாய்ப்பு தேடும் பொருட்டு மனிதவலு பயன்பாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குத் தலா 2,500 ரூபா படி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செலவினங்களும் அதிகரித்தமையால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அரசு நேற்று அறிவித்தது.

வடக்கு-கிழக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பெருமளவு நிதி தேவைப்படுகிறது. மேலும் தேயிலை, றப்பர் ஏற்றுமதி குறைந்துள்ளதால் அரசின் வருமானம் குறைந்துள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது. (சி)

# குவைத்திலிருந்து திரும்பியோருக்கு நட்டஈட்டு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

குவைத்-ஈராக்கிலிருந்து கலவரத்தின்போது திரும்பிவந்தவர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் இம்மாதம் 20-ம் திகதி முதல் அடுத்த மாதம் 5-ந் திகதி வரை யாழ். செயலகத்தில் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் பெறுவதற்கு உரிய அத்தாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டும். அவையாவன பாஸ்போர்ட், நட்டமேற்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்ததற்கான பற்றுச் சீட்டுகள். உயிர் இழப்பு ஏற்பட்டிருப்பின் அதற்கான இறப்பு அத்தாட்சிப் பத்திரம், காயமேற்பட்டிருந்தால் வைத்திய அறிக்கைகள் என்பன போன்றவையாகும் உரிய அத்தாட்சிப் பத்திரங்களின் மூலப் பிரதிகள் சமாப்பிப்பவர்களுக்கு மட்டுமே.

நட்டஈடு கோரி ஏற்கனவே விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு அதற்கான பதிவு இலக்கங்கள் கொழும்பு அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

## நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களினால் கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக சிபார்சுசெய்யப்பட்ட நோயாளர்களை சகலஆவணங்களுடன் எதிர்வரும் 18ம், 19ம் திகதி காலை 9 மணி தொடக்கம் பணிப்பாளர் காரியாலயத்தில் வந்து சந்திக்கும்படி பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் அறிவித்துள்ளார். (56)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

''ஷப்ரு'' வெற்றிக்கிண்ணத்துக்காக ''ஜொலி ஸ்ரார்ஸ்,' விளையாட்டுக்கழகம், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக்கொண்ட கிரிக்கெட்போட்டி இன்று யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் காலையும், பிற்பகலும் நடைபெறவுள்ளது

இன்று காலை சென்றலைட்ஸ் (சொக்ஸ்) கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ் (கோல்ட்) கழகம் மோதும். பிற்பகல் ஆட்டத்தில் ஷப்ரு கழகத்தை எதிர்த்து சென்றலைட்ஸ் (புளுஸ்) கழகம் மோதும். (வி)

## சட்டவிரோத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துள்ளார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள பிரிவினை சக்திகளுக்கு விடுதலைப்புலிகள் ஊக்கம் அளித்துவருவதுடன் இந்த பிரிவினைவாத சக்திகள் வெளிப்படையாகவே பிரிவினை கோரும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவது குறித்து மத்திய அரசுக்கு தகவல்கள் கிடைத்துள்ளது.

அசாமில் சட்டவிரோத இயக்கமாக அறிவிக்கப்பட்டுள்ள உல்பா இயக்கத்துடன் விடுதலை புலிகளுக்கு தொடர்பு உள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சுயாட்சி உரிமைக்கும், இறைமைக்கும், பிராந்திய ஒருமைப்பாட்டுக்கும் விடுதலைப்புலிகள் ஓர் அச்சுறுத்தலாக விளங்குகிறார்கள்.

தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளின் செயல்களை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி, இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகவுள்ள அந்த இயக்கத்தை ஒரு சட்டவிரோதமான இயக்கமாக அறிவிக்க அரசு முடிவுசெய்தது.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு மற்றும் தமிழக அரசின் கரங்களை இந்த முடிவு வலுப்படுத்தும் என்று திரு. எஸ். பி. சவான் நம்பிக்கை தெரிவித்தார். (மா)

# எல்லையோரபடைமுகாம்களை பலப்படுத்த உத்தரவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண எல்லைகளிலுள்ள படைமுகாம்களின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

புலிகளின் தாக்குதல் வடக்கு-கிழக்கை தவிர எல்லைப்பகுதி மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படலாமென்ற தகவல்களையடுத்தே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார், வவுனியா பகுதியிலும் படைமுகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி-மா)

# அரச திணைக்களங்களில் ஊழியர் பற்றுக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க திணைக்களங்களில் ஊழியர் பற்றுக்குறை பெருமளவில் நிலவுகின்றபோதிலும் இதுதொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் இன்னும் யாழ் அரச அதிபருக்குத தெரிவிக்கவிக்கவில்லை என்று யாழ் செயலக அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

மேற்படி இலாகாக்கள் தமக்கு ஊழியர் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதினால் தமது வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று முன்னர் பல தடவைகள் முறையிட்டார்கள். அண்மையில் நடைபெற்ற எழுதுவினைஞர் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 304 பேரும் சேவையாற்றுவதற்கு தயாராக இருக்கின்றபோதிலும் பெரும்பாலான இலாகாகள் தமக்கு வேண்டிய ஊழியர்களின் விபரங்களை வெளியிடவில்லை எனத் தெரியவருகிறது. (வி)

# புலிகள் மீதான தடையால் இந்தியாவில் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது

(புதுடில்லி)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நடவடிக்கையை அடுத்துப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

மாநிலங்கள் அவையில் அவர் மேலும் தெரிவிக்கையில்; புலிகளை தடைசெய்துள்ளதால் பாதுகாப்பிற்கு ஏதாவது அச்சுறுத்தல் ஏற்படாத விதத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும் இலங்கைத்தமிழர் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இல்லையென்பதையும் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டுமென்பதில் இந்தியா உறுதியாக இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதற்கிடையில் புலிகள் மீதான தடைக்கு மாநிலங்களவை உறுப்பினர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். (சி)

## வவுனியா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வத்தினர் மீது புலிகள் திடீர் தாக்குதலை நடத்தினார்கள்.

இத்தாக்குதலில் இரு படையினர் பலியானதுடன் ஆறு படையினரும் காயங்களுடன் முகாமிற்கு தப்பியோடினார்கள்.

இத்தாக்குதலில் ஏ கே. இலகு இயந்திரத் துப்பாக்கி-1 எஸ் எல். ஆர். துப்பாக்கி-1, ஏ. கே இலகு இயந்திர துப்பாக்கிக்குரிய 3 ரவைக்கூடுகள், எஸ். எல். ஆர். துப்பாக்குரிய 3 ரவைக் கூடுகள், 380 தொடர் ரவைகள், ரவைக்கூடு தாங்கி அணி- 1, இருசோடி சப்பாத்துக்கள் போன்றவை விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. (மா)

## பத்து லட்சம்பேர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட அகதிகள் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு சர்வதேச உதவியை அரசு எதிர்பார்த்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## சிங்களவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து இப்பகுதி தமிழ் மக்கள் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (சி)

## இன்று தேர்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் வடக்கு கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா இன்று காலை பத்துமணியளவில் நடைபெறும், நாளை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## சிங்களக் கட்சிகளின்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

இந்த அடிப்படையிலேயே ஐ. தே. க வும், சுதந்திரக் கட்சியும் தமது யோசனைகளை தெரிவிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் பராசக்தி

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியத்தின் மனைவி பராசக்தி 11-05-92 இல் காலமானார். இவர் ஜீவகாந்தன், ஜீவமலர், ஜீவசுதன், ஜீவரூசாந்தி, ஜீவவாசுகி ஆகியோரது அன்புத் தாயாரும், ம. நாகலிங்கம், சிவபாக்கியத்தின் மகளும், அமிர்தலிங்கம், விஜேதினி, சந்திரசேகர், பிரேமரூபன் ஆகியோரது சகோதரியும், வே. துரையப்பாவின் பெருமகளும் ஆவார். அன்னாரது ஈமச்சடங்குகள் 12-05-92 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கணவன் பெ. சுப்பிரமணியம் (மணியம்)
(உரிமையாளர், நியூலக்கி சலூன்)
K. K. S. வீதி, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (சி-6310)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/81